# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளின் கீழ், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்கான விதப்புரையினைப் பரிசீலிப்பதற்குப் பொருத்தமான தனிநபர்களிடமிருந்து அரசியலமைப்புப் பேரவை விண்ணப்பங்களைக் கோருகின்றது.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது பதினைந்து வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட சட்டத்தரணியாக இருக்கவேண்டுமென்பதுடன் குற்றவியல் சட்ட நடவடிக்கைமுறைகளில் காத்திரமான அறிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்-

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்;
- பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக ஐம்பத்தி ஐந்து (55) வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது;
- தகுதிவாய்ந்தவராகவும், நேர்மைமிக்கவராகவும், நெறி வாய்மைமிக்கவராகவும் சிறந்த நன்மதிப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்;
- பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்பதற்கு முன்னர் ஊதியம் பெறும் ஏனைய சகல பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும். எனினும், ஏதேனும் ஊதியம் பெறும் பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய பணிப்பாளர் நாயகப் பதவியை ஏற்பதற்கு முன்னர் அத்தகைய ஊதியம் பெறும் எல்லாப் பதவிகளையும் கைதுறந்தால், பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்காகப் பரிசீலிக்கப்படலாம்

  எவ்வாறாயினும், எந்த ஓர் அரசாங்க அதிகாரியினையும் பணிப்பாளர் தலைமையதிபதியை மாற்றுப் பதவி அடிப்படையில் பதவிக்கு அமர்த்துவதை இந்த ஏற்பாடுகள் தடுக்காது;

- பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்க முன்னர் நடைமுறையிலிருக்கும் எழுத்திலான சட்டங்களின் கீழ் அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனப்படுத்த வேண்டும்; மற்றும்
- பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியேற்க முன்னர், நியமிக்கப்படும் திகதியின்போதுள்ளவாறாக அவருடைய அக்கறைகளின் பகிரங்க வெளிக்கூறலை அவர் அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும், ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில், பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிக்கப்படுவதற்கு, அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியைத் தொடர்ந்து பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராக்கப்படுவார் –

- குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறல்லாத குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;
- தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்க வகையற்றவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;
- சித்தசுவாதீனமற்றவராகவிருப்பின் அல்லது சித்தசுவாதீனமற்றவராக மாறின் அல்லது இச்சட்டத்தின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலற்றவராக இருப்பின்;
- அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குரிய குற்றவாளியாகவிருப்பின்;
- இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்;
- ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராக இருப்பின் அல்லது அவ்வாறான பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின்; அல்லது
- தேர்தல்களுக்கு ஏற்புடையப்பாலனவான முறையான சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படும் சனாதிபதித் தேர்தல்களின், பாராளுமன்றத் தேர்தல்களின், மாகாண சபைத் தேர்தல்களின் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின்

விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்களின் விண்ணப்பத்தினைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர்:

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

பாராளுமன்ற இணையத்தளத்தில் (www.parliament.lk), *CIABOC இற்கான பணிப்பாளர் தலைமையதிபதி நியமனம்* எனப் பெயரிடப்பட்டுள்ள துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல் படிவம் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2024 மார்ச் 04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக *'இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமனம்'* எனச் சுட்டிக்காட்டவும்.

அரசியலமைப்புப் பேரவையின் உத்தரவின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவைச் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024 பெப்ரவரி 11 ஆம் திகதி.**